# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 2000 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, றொனி டி மெல் ருகுணு பல்கலைக்கழக நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2000, யூலை மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 01. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 3.50**

## 2000 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, றொனி டி மெல் – ருகுணு பல்கலைக்கழக நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்)

[2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 77/98

## றொனி டி மெல் – ருகுணு பல்கலைக்கழக நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"றொனி டி மெல் – ருகுணு பல்கலைக்கழக நம்பிக்கைப் பொறுப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நம்பிக்கைப்பொறுப்பொன்று அதன் குறிக்கோள்களையும் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்புடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதன் முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும், பொறுப்பு இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :– சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2000 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, றொனி டி மெல் – ருகுணு பல்கலைக்கழக நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நம்பிக்கைப் பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) றொனி டி மெல் – ருகுணு பல்கலைக்கழக நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் தற்போதைய உறுப்பினர்களாக இருக்கின்றவர்களும் அல்லது இச்சட்டத்துக்கான அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களும் அல்லது மேற்படி நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "றொனி டி மெல் – ருகுணு பல்கலைக்கழக நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் றொனி டி மெல் – ருகுணு பல்கலைக்கழக நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொருளாளர் சபையைக் கூட்டிணைத்தல்.

பொறுப்பாளர் சபை" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. நம்பிக்கைப்பொறுப்பு உருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) ருகுணு பல்கலைக்கழகத்தில் கல்விப் போதனை மற்றும் ஆராய்ச்சிக்கென தலைமைகளை உருவாக்குதலும் அதிகாரமளித்தலும் ;

(ஆ) ஆராய்ச்சியையும் கற்கையையும் ஊக்குவித்தலும் அதனை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பிரயோகித்தலும் ;

(இ) ருகுணுவின் வரலாறு, தொல்பொருளியல், இலக்கியம், ஓவியம் மற்றும் கலாசாரம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் ;

(ஈ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கண்காணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் ருகுணு பல்கலைக்கழக மாணவர்களுக்கு வதிவிட மற்றும் நலன்புரி வசதிகளை ஒழுங்கு செய்தல் ;

(உ) ருகுணு பல்கலைக்கழகத்தில் நூலக வசதிகளை விசாலித்தல் ;

(ஊ) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு போதியளவு விளையாட்டுத் திடல்களையும் ஏனைய வசதிகளையும் வழங்கல் ;

(எ) ருகுணு பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பட்டப்படிப்பிற்கும் பட்டப்பின் கற்கைகளுக்கும் நிதியுதவி, புலமைப் பரிசில் மற்றும் மானிய உதவிகளை வழங்குதல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அபிப்பிராயப்படி ருகுணு பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு நன்மைபயக்கும் ஏனைய எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் செய்தல்.

4. மேற்படி பதவியிலிருந்து அவர் முன்னரே விலகினாலன்றி, சனாதிபதியே நம்பிக்கைப்பொறுப்பின் ஆயுட்காலத் தாபகராயிருத்தல் வேண்டும் என்பதுடன் அவருக்குப் பின்னர் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருப்பதற்கென அவரது வழியுரிமையாளரைப் பெயர்குறித்து நியமித்தலும் வேண்டும். *சனாதிபதியே நம்பிக்கைப் பொறுப்பின் ஆயுட்காலத் தாபகராதல்.*

5. (1) இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் நம்பிக்கைப்பொறுப்பின் நியதிகளுக்கும் அமைவாக நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது இடைநேர்விளைவான அல்லது உகந்தனவான எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கு கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

(2) ஒராம் உட்பிரிவால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கொடை என்பவற்றின் பயனாக அல்லது வேறுவகையாக கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளுதல் அத்துடன் வைத்திருத்தல்;

(ஆ) அத்தகைய ஆதனம் எதனையும் விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்கு விடல், உரிமை மாற்றுதல், மரணசாதன வகையாகக் கையளித்தல், சாட்டுதல் செய்தல் கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் ;

(இ) நம்பிக்கைப்பொறுப்பிற்குரிய நிதியை திறைசேரிமுறிகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பிணையங்களிலும் முதலீடு செய்தல் ;

(ஈ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்தல், மூடுதல் அத்துடன் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுத்தலும் அல்லது பெறுதலும் ;

(உ) நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையில் சேர்த்துக் கொள்ளல், வேலையிலீடுபடுத்தல் அத்துடன் வேலையிலிருந்து நீக்குதல்;

(ஊ) பணங்களைத் திரட்டுதலும் மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைக் காசாகவோ அல்லது பொருளாகவோ பொறுப்பேற்றலும் ; அத்துடன்

(எ) நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உகந்தனவான அல்லது இடைநேர் விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) கூட்டுத்தாபனமானது காலத்துக்குக்காலம், உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் நம்பிக்கைப்பொறுப்பின் நியதிகளுக்கும் ஒவ்வாதனவாகவிராத விதிகளை பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எது தொடர்பிலும் விதிகளை ஆக்குவது சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) ருகுணு பல்கலைக்கழக மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களை வழங்குதலும் நிதி உதவி வழங்குதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுகையில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினதும் பல்வேறு அலுவலர்களினதும் அத்துடன் சேவையாளர்களினதும் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் அத்துடன் பணிகள் ;

(ஈ) நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக நம்பிக்கைப்பொறுப்பால் உறப்படக் கூடிய அத்தகைய செலவினங்களைக் கொடுத்துத் தீர்த்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை நிருவகித்தலும், முகாமை செய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ;

(ஊ) நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையான அத்தகைய வேறு கருமங்கள்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் ஏதேனும் விதி (1)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படக்கூடிய விதியொன்றைப் போன்று அதேபோன்றவொரு கூட்டத்திலும் அதே முறையிலும் மாற்றப் படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமைந்தொழுகுதல் வேண்டும்.

7. கூட்டுத்தாபனத்தின் நிதியமானது – கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று நம்பிக்கைப்பொறுப்பின் வரவில் இருந்த எல்லாப் பணங்களையும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் தொடங்கிய திகதிக்குப் பின்னர் கூட்டுத் தாபனத்துக்குத் திரளக்கூடிய எல்லாப் பணங் களையும்

கொண்டிருத்தல் வேண்டும்.

8. (1) கூட்டுத்தாபனம் கூட்டுத்தாபனத்தின் எல்லா வரவு செலவுகளினதும் தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். கணக்குகளின் கணக்காய்வு.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர்களால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டியவையும் நிதியத்தால் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**9.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று கூட்டுத்தாபனத்திற்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று நம்பிக்கைப் பொறுப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் ஒப்படைப்பணங்கள் செலுத்தப்படற்பாலதான மானியக்கொடை மூலதனத்தின் பங்குகள் என்பனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், சபையின் அனுமதியுடனும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் இரண்டு உறுப்பினர்களது முன்னிலையிலுமன்றி, எத்தகையதுமான எச்சாதனத்திலும் இடப்படலாகாது. மேலும் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** (பிரிவு 2)

**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை**

திரு. றொனால்ட் ஜோசப் கொட்ப்ரீ டி மெல், தலைவர் (தாபகர்)
கலாநிதி வர்ணசேன ராசபுத்ர
பேராசிரியர் ஆயல் ஜயதிலக
திரு. ரஞ்ஜித் அபேசூரிய, சனாதிபதி வழக்குரைஞர்
திரு. ஏலியன் நாணயக்கார
திருமதி மல்லிகா டி மெல்
ருகுணு பல்கலைக்கழக உபவேந்தர் (பதவி வழியாக)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*